## செப்டம்பர் - 20 - புதன்
### புனிதர்கள் அன்டறூ கிம் தோழர்கள்

**முதல் வாசகம் : 1 திமோத்தி 3 : 14 – 16**

விசுவாச அடிப்படையில் என் உண்மையான பிள்ளை திமொத்தேயுவுக்கு நான் விரைவில் உன்னிடம் வருவேன் என்னும் எதிர்நோக்குடன் இவற்றை உனக்கு எழுதுகிறேன். நான் வரக் காலந்தாழ்த்தினால், நீ கடவுளின் வீட்டாரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை இத்திருமுகத்தின் வழியாகத் தெரிந்து கொள்ளலாம். இவ்வீட்டாரே வாழும் கடவுளின் திருச்சபை இத்திருச்சபை உண்மைக்குத் தூணும் அடித்தளமுமாய் இருக்கிறது. நமது சமயத்தின் மறை உண்மை உயர்வானது என்பதில் ஐயமேயில்லை. அது பின்வருமாறு "மானிடராய் அவர் வெளிப்படுத்தப்பட்டார் தூய ஆவியால் நேர்மையாளர் என மெய்ப்பிக்கப்பட்டார் வானதூதருக்குத் தோன்றினார். பிற இனத்தாருக்குப் பறைசாற்றப்பட்டார் உலகினரால் நம்பிக்கையோடு ஏற்கப்பெற்றார் மாட்சியோடு விண்ணேற்றமடைந்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவரின் செயல்கள் உயர்ந்தவை

**நற்செய்தி : லூக்கா7 : 31 – 35**

அக்காலத்தில் இயேசு "இத் தலைமுறையின் மக்களை யாருக்கு ஒப்பிடுவேன்? இவர்கள் யாருக்கு ஒப்பானவர்கள்?இவர்கள் சந்தை வெளியில் உட்கார்ந்து ஒருவரை ஒருவர் கூப்பிட்டு "நாங்கள் குழல் ஊதினோம் நீங்கள் கூத்தாடவில்லை. நாங்கள் ஒப்பாரி வைத்தோம் நீங்கள் அழவில்லை" என்று கூறி விளையாடும் சிறு பிள்ளைகளுக்கு ஒப்பானவர்கள்."எப்படியெனில், திருமுழுக்கு யோவான் வந்தார் அவர் உணவு அருந்தவுமில்லை திராட்சை மது குடிக்கவுமில்லை அவரை, "பேய் பிடித்தவன்" என்றீர்கள்.மானிட மகன் வந்துள்ளார் அவர் உண்கிறார், குடிக்கிறார் நீங்களோ, "இம்மனிதன் பெருந்தீனிக்காரன், குடிகாரன், வரி தண்டுபவர்களுக்கும் பாவிகளுக்கும் நண்பன்" என்கிறீர்கள். எனினும் ஞானம் மெய்யானது என்பதற்கு அதை ஏற்றுக்கொண்டோரின் செயல்களே சான்று" என்றார்.

**தியானம்:** வாழ்ந்தாலும் பேசும் வீழ்ந்தாலும் ஏசும் பொல்லாத உலகமடா என்று ஒரு கவிஞர் அருமையாகப் பாடியிருந்தார்.. நாலுபேர் நாலுவிதமாக பேசிவிடுவார்கள் என்று பயந்து பயந்து வாழும் மனிதர்கள் நம்மில் எத்தனைபேர்? பிறர் நம்மை விமர்சனம் செய்துவிடக்கூடாது என்பதற்காக நம்மில் எத்தனைபேர் போலியான முகமுடிகளை அணிந்து நம்முடைய இயல்பான தன்மைகளை இழந்து வருகின்றோம். என்னைப்பற்றி, என்குடும்பத்தைப் பற்றி பிறர் என்ன சொல்லுவார்கள்? என்ன நினைப்பார்கள்? என்று கவலைப்பட்டே நம்முடைய ஆயுளின் பாதிநாட்கள் வீணாய் போய்விடுகின்றது. இன்றைய நற்செய்தி வாசகத்தின் வழியாக ஆண்டவர் இயேசு நம்மிடம் சொல்வது, வெட்டி மனிதர்கள் வீணாய் பேசுகின்ற வார்த்தைகளுக்காக உன்னை நீ மாற்றிக் கொள்ளாதே. உலகம் உன்னைப்பார்த்து என்ன சொல்லுகின்றது அல்லது என்ன நினைத்துக் கொண்டிருக்கின்றது என்பதைக் குறித்து கவலைப்படாதே மாறாக உன்னைப் படைத்த கடவுள் உன்னைக் குறித்து என்ன நினைப்பார்? என்ன பேசுவார் என்பதில் உன் கவனத்தைச் செலுத்தி அதனடிப்படையில் உன் வாழ்வை அமைத்துக்கொள் என்று நமக்கு அழைப்பு விடுகின்றார். உலகம் விபச்சாரி என்று விமர்சனம் செய்தவரை இயேசு தன்னுடைய உயிர்ப்பின் முதல் சாட்சியாய் மாற்றினார். உலகம் பாவி என்று ஒதுக்கி இகழ்ந்து பேசிய சுங்கத்துறையில் வரிவசூலித்துக் கொண்டிருந்த மத்தேயுவை இயேசு தன்னுடைய அன்புச் சீடனாக மாற்றி நற்செய்தியை எழுதக்கூடிய அப்போஸ்தலனாக மாற்றினார். தீவிரவாதி என்று உலகம் அழைத்த யாக்கோபுவை இயேசுவுக்காக தனது உயிரை தியாகம் செய்யும் திருத்தூதனாக மாற்றினார். இப்படி உலகத்தின் பார்வையில் விமர்சனம் செய்யப்பட்ட மனிதர்களை இயேசு தன்னுடைய அன்பினால் தனக்குரியவர்களாக மாற்றினார். ஏனெனில் இம்மனிதர்கள் உலகத்தின் குரலை கேட்காமல் இயேசுவின் குரலை கேட்டதனால். யாரெல்லாம் இயேசுவின் குரலை தங்களுடைய வாழ்க்கையில் கேட்க ஆர்வம் காட்டுகின்றார்களோ அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் பெரிய மாற்றங்களை அற்புதங்களை அனுபவிப்பார்கள். உலகத்தின் சத்தங்கள் நம்மை அச்சுறுத்தும், அவமானப்படுத்தும் நம்மை கூனிக்குறுகி நிற்கவைக்கும். ஆனால் ஆண்டவர் இயேசுவின் குரலோ நமக்கு ஆறுதல் கொடுக்கும், அரவணைக்கும், புதுத்தென்பு கொடுத்து நமது வாழ்வை உயர்த்தும். உலகத்தின் விமர்சனங்களுக்கு மத்தியில் மெல்லிய குரலாக ஒலிக்கும் இயேசுவின் குரலை கேட்க நம்முடைய இதயத்தையும், காதுகளையும் தயார்படுத்துவோம். இறைவார்த்தையின் வாயிலாக அன்றாடம் நம்மோடு பேசும் இறைவனின் குரலை நாம் கேட்போம். இறைவன் நமக்காக நம்முடைய குடும்பத்திற்காக வழங்கிய வாக்குத்தத்தங்களை அனுதினமும் சொல்லி செபிப்போம்.